7. கொரோனா நோய்த் தடுப்புப் பணியில் ஈடுபட்டுள்ள மருத்துவர்கள், மருத்துவப் பணியாளர்கள் மற்றும் பிற துறைப் பணியாளர்களுக்கு கரவொலி எழுப்பி நன்றி தெரிவித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா வைரஸ் தொற்று நோய்த் தடுப்புப் பணிகளில் அர்ப்பணிப்போடு தங்களை ஈடுபடுத்தி, பணிபுரிகின்ற மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள் மற்றும் இதற்குத் துணையாகச் செயல்படுகின்ற பிற துறைப் பணியாளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் கரவொலி எழுப்பி, நன்றி தெரிவிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் கரவொலி எழுப்பினர்.)

6. மானியக் கோரிக்கைகள், 2020–2021, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காய்ந்து சிவந்த கதிரவன் நிறத்தை ஈந்து சிவந்த கரத்தால் பெற்றவர்; 7½ கோடி தமிழக மக்களின் உள்ளங்களிலே வாழ்ந்து கொண்டிருப்பவர்; கல்லறைக்குள்ளே இருந்தாலும் உலகத்தாரின் கவனத்தை இன்றைக்கும் தன்மீது ஈர்த்துக் கொண்டிருப்பவர்; ஏழைகளின் இதய வேந்தன்; வாழும்போதே வரலாறாக வாழ்ந்து காட்டியவர்; அண்ணாவின் இதயக் கனியாக அண்ணா உருவாக்கிய இயக்கத்தின் ஆணி வேராக, 'தொண்டனே இயக்கம், இயக்கமே தொண்டன்' என்ற வரலாற்றை உருவாக்கி, கழகப் பொருளாளராகப் பணியாற்றியபோது தி.மு.க.–வின் ஊழல்களை எதிர்த்தும், குடும்ப அரசியலை எதிர்த்தும் 1972 ஆம் ஆண்டு அக்டோபர் 8 ஆம் தேதி திருக்கழுக்குன்றத்தில் கேள்விக் கணைகளைத் தொடுத்ததன் விளைவாக 1972 ஆம் ஆண்டு அக்டோபர் 10 ஆம் தேதி இயக்கத்திலிருந்து விலக்கப்பட்டார் புரட்சித் தலைவர்